# <u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.S.ரவிச்சந்திரன் பி.ஏ., | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் |
| ஆணையாளர், | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க.எண். 45/2020/சி1 நாள்: .02.2021**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி –அவசரக் கூட்டம் 27.01.2021 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 27.01.2021 அன்று அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

பொருள் எண்.1

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 26888/UGSS-2/2018, நாள்: 15.11.2018ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டம் நடைபெறவுள்ளது.

இந்நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையத்தினை செயல்படுத்த உப விதிகள் உருவாக்க வேண்டியுள்ளது. உப விதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்–ன் பிரிவு 306 உட்பிரிவு 5 (உ) மற்றும் உட்பிரிவு 6 (1920 தமிழ்நாடு சட்டம் 5)–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டம் 1930 (1930–ம் தமிழ்நாடு சட்டம் 10)–ன் படியும் உருவாக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இணைக்கப்பட்டுள்ள கடையநல்லூர் நகராட்சி கழிவு கசடு மேலாண்மை உப விதிகள் வரைவு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: –

கடையநல்லூர் நகராட்சி கழிவு கசடு மேலாண்மை உப விதிகள் வரைவிற்கு ஒப்புதல் வழங்கலாம். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் பொது அனுமதி (General Approval) பெற அனுப்பலாம்.

**தீர்மான எண். 351**

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)S.ரவிச்சந்திரன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.